

பாடம் 7

மே 11-17

# நம்பிக்கையினால் ஊக்கமடைதல்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1தெச 4:13–18; மத்தேயு 24:27,30,31; 2பேதுரு 1:19–21; யோவான் 8:14; 9:20–27; எஸ்றா 7:7–13.

**மனன வசனம்:** அக்காலத்திலே: இதோ, இவரே நம்முடைய தேவன்; இவருக்காகக் காத்திருந்தோம், இவர் நம்மை இரட்சிப்பார்; இவரே கர்த்தர், இவருக்காகக் காத்திருந்தோம்; இவருடைய ரட்சிப்பினால் களிகூர்ந்து மகிழுவோம் என்று சொல்லப்படும். ஏசா 25:9.

வேதாகமத்தின் முக்கியக்கருத்துகளில் இயேசுவின் இரண்டாம் வருகையும் ஒன்று. அது ஒரு பொன் இழைபோல வேதாகமத்தின் பரிசுத்த பக்கங்கள் முழுவதிலும் ஊடுருவிச் செல்கிறது. பழைய ஏற்பாட்டில் 1845 இடங்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றிக் குறிப்பிடப்படுவதாக ஒரு அறிஞர் கணக்கிட்டுள்ளார். புதிய ஏற்பாட்டின் 262 அதிகாரங்களில், 300க்கும் அதிகமான இடங்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை சொல்லப்படுகிறது. 25 வசனங்களுக்கு ஒரு வசனம் அதுபற்றிக் குறிப்பிடுகிறது. 27 புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் 23 புத்தகங்கள் அந்த மாபெரும் நிகழ்வுபற்றிக் குறிப்பிடுகின்றன.

ஐரோப்பாவில் பிரிவினைகள்-சண்டைகளால் சீர்திருத்தம் முடங்கிச் செயலிழந்தபோது, அமெரிக்கா எனும் தேசமாக உருவாகவிருந்த புது உலகத்தில் புரொட்டஸ்டன்ட் மார்க்கம் வேரூன்றியது; அங்கு இரண்டாம் வருகையின் சத்தியம் உட்பட்ட சத்தியத்தின் ஜோதியை எடுத்துச்செல்ல அநேகர் முயன்றார்கள்.

அவர்களில் முன்னாள் பேப்டிஸ்ட் சபை அங்கத்தினரான வில்லியம் மில்லரும் ஒருவர். வேதாகமத்தை ஆராய்ந்தபோது, தன் வாழ்நாளிலேயே இயேசு வந்வருவாரென நம்பினார்; அந்தச் செய்தியைப் பிரசங்கித்தார்; ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார்; அதன்பிறகு மாபெரும் ஏமாற்றத்தைச் சந்தித்தாலும், இன்றுவரை பொருத்தமாக உள்ள அநேக வேதாகமச் சத்தியங்களைப் போதித்தார்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகைகுறித்த செய்தி ஏன் நூற்றாண்டுகள் நெடுகிலும் விசுவாசிகளின் இருதயங்களை மகிழ்ச்சியால் நிரப்பியது, அந்த மாபெரும் நிகழ்வுக்கு நாம் எவ்வாறு ஆயத்தமாகலாம் என்பதுபற்றி ஆராய்வோம்.

***மாபெரும் போராட்டம், 18-21ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, மே 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# அவரது வருகை குறித்த வாக்குறுதி

ஹாலந்தைவிட்டு புது உலகத்திற்குச் சென்ற புரொட்டஸ்டன்ட் சீர்திருத்த வாதிகளும் யாத்ரீகர்களும் இயேசுவின் வருகைக்காக ஏங்கினார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைகுறித்த எண்ணம் பேரானந்தத்தைக் கொடுத்ததால், அதை மகிழ்ச்சியோடே எதிர்பார்த்தார்கள். திருச்சபை நம்பிக்கையோடு எதிர்பார்த்த கிறிஸ்துவின் வருகையை ஜான் விக்ளிஃப் ஆவலோடு எதிர்பார்த்தார். இரண்டாம் வருகை ''அனைத்து நிகழ்வுகளிலும் அதிகப் பிரியமானது'' என்று கேல்வின் சொன்னார். அனைத்து சீர்திருத்தவாதிகளின் எண்ணமும் அதுவே. தேவனுக்கு உண்மையுள்ள மக்களுக்கு பயத்தை அல்ல, மகிழ்ச்சியைக் கொடுக்கிற நிகழ்வாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, இருந்தது.

**பின்வரும் வசனங்கள் ஏன் நூற்றாண்டுகள் நெடுகிலும் கிறிஸ்தவர்களுக்கு அதிக நம்பிக்கையைக் கொடுக்கின்றன? யோவான் 14:1-3; 1தெச 4:13-18; தீத்து 2:11-14.**

வேதாகமத்தை நம்புகிற கிறிஸ்தவர்களுக்கு, கிறிஸ்துவின் வருகைமீதான நம்பிக்கையால் ஏன் அவ்வளவு நம்பிக்கையும் சந்தோஷமும் கிடைத்தன? அவரது வருகையில் வியாதியும், உபத்திரவமும், மரணமும் ஒழியப்போகின்றன. சண்டையும் சச்சரவும் யுத்தமும் அழியப்போகின்றன. கிறிஸ்துவோடு நித்திய காலம் வாழப்போகிற மீட்கப்பட்டவர்களோடு நீடித்த ஐக்கியமும் சமாதானமும் சந்தோஷமும் இருக்கிற உலகம் வரப்போகிறது.

'கர்த்தரின் வருகைதான் எல்லாக்காலங்களிலும் அவருடைய மெய்யடியார்களின் நம்பிக்கையாக இருந்திருக்கிறது. ஒலிவமலையின் மீதிருந்து இரட்சகர் பிரிந்து சென்றபோது, தாம் மறுபடியும் வரப்போவதாகக் கொடுத்த வாக்குத்தத்தம் அவரது சீடர்களின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்கியது; துயரத்தால் அணைக்க இயலாத, சோதனைகளால் குறைக்கமுடியாத மகிழ்ச்சியாலும் நம்பிக்கையாலும் சீடர்களுடையஇருதயங்களைநிறைத்தது.பாடுகளுக்கும்உபத்திரவங்களுக்கும் மத்தியிலும், மகாதேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மகிமையின் பிரசன்னமாகுதல்தான், அவர்களுடைய 'பாக்கியமான நம்பிக்கை'யாக இருந்தது. கர்த்தருடைய வருகைமட்டும் உயிருடன் இருப்பார்களென தெசலோனிக்கேயர் நம்பியிருந்த தங்களுக்கு பிரியமானவர்களைக் கல்லறையில் அடக்கம்செய்தபோது, மிகுந்த துயரடைந்தார்கள்; அவர்களுடைய போதகராயிருந்த பவுல் அப்போது இரட்சகரின் வருகையில் நிகழவிருக்கும் உயிர்தெழுதலைச் சுட்டிக்காட்டினார். அப்பொழுது கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்; பின்பு உயிரோடிருப்பவர்களோடு சேர்ந்து, கர்த்தருக்கு எதிர்கொண்டு போக ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்; இந்த வார்த்தைகளினாலே ஒருவரையொருவர் தேற்றுங்கள் என்றார்.1தெச 4:16-18.'

---

**இரண்டாம் வருகை ஏன் நமது விசுவாசத்திற்கு மிகவும் முக்கியமானது? மரித்தவர்கள் நித்திரை செய்கிறார்கள் (பாடம் 10ஐப் பார்க்கவும்) என்பது நமக்குத் தெரியும்; எனவே, இந்தப் போதனை ஏன் இன்னும் அதிக முக்கியமாகிறது? அதில்லாமல், பவுல் சொல்வதுபோல, ஏன் முற்றிலும் நம்பிக்கையற்ற நிலையில் இருந்திருப்போம்? 1கொரி 15:15-18.**

# காலத்தை எதிர்பார்த்திருத்தல்

கிறிஸ்து தாம் சொன்னபடி, எல்லாரும் காணும்படி, காதுகள் கேட்கும்படி, மகிமையாக மீண்டும் வருவார் என்பதை சீர்த்திருத்தவாதிகள் நம்பினாலும், இந்த வேதாகமச் சத்தியம்பற்றின புரிதல் படிப்படியாக மாறியது. 19 ஆம் நூற்றாண்டின் பிரபலமான போதகர்கள் கிறிஸ்து பூமியில் தமது ராஜ்யத்தை நிறுவவும், 1,000 ஆண்டுகள் சமாதானத்தை ஏற்படுத்தவும் வருவார் என்று கற்பித்தனர். இது ஆவிக்குரிய மந்தநிலைக்கும் ஆன்மிக விழுமியங்களின்மீது அக்கறையில்லாமல் போவதற்கும் வழிநடத்தியது.

அதுபோல, கிறிஸ்துவின் சீடர்கள் மேசியாவின் வருகையின் தன்மையை தவறாகப் புரிந்துகொண்டனர். அவர் பாவத்தின் சங்கிலிகளிலும் ஆக்கினையிலுமிருந்து விடுவிக்க வருவதை அறியாமல், ரோம அடிமைத்தனத்தின் நுகத்தை உடைக்கிற வெற்றிகரமான தளபதியாக வருவாரென்று நினைத்தனர்.

**நம் கர்த்தருடைய வருகையின் தன்மைகுறித்து அப் 1:9-11; வெளி 1:7; மத்தேயு 24:27,30,31 என்ன போதிக்கின்றன?**

பெத்லகேமின் மாட்டுத்தொழுவத்தில், ஒரு குழந்தையாகப் பிறந்து, கிறிஸ்து முதன்முறை வந்தபோது, வெகுசிலரே அவரது வருகையை உணர்ந்திருந்தனர். ஆனால் அவர் இரண்டாம் முறை வரும்போது, 'கண்கள் யாவும்' அவரைக் காணும். அவரது வருகையின் எக்காளச் சத்தத்தை காதுகள் யாவும் கேட்கும். பூமியிலுள்ள ஒவ்வொரு மனிதரும் அவரது மகிமையைக் காண்பார்கள். நாம் வஞ்சிக்கப்பட வேண்டியதில்லை. அவரது வருகை சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை வேதாகமம் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

'இரட்சிப்பின் மாபெரும் பணியை நிறைவுசெய்ய கிறிஸ்து இரண்டாம்முறை வரப்போகிறார்; இதுதான் பரிசுத்த வேதாகமச் சத்தியங்களில் கருத்தாழமான, மகிமையான சத்தியம். 'மரண இருளின் பகுதியில்' வெகுகாலமாகச் சஞ்சரித்து வருகிற தேவ யாத்ரீகர்களுக்கு இது தேவன் தருகிற வாக்குத்தத்தம். 'உயிர்த்தெழுதலும் ஜீவனுமானவரின்' வருகையின்மூலம் துரத்துண்ட தம்முடையவர்களை மீண்டும் அழைத்துக்கொள்வதுபற்றிய இந்த வாக்குத்தத்தத்தில் மகிழ்ச்சிதருகிற நம்பிக்கை உள்ளது. இரண்டாம் வருகைபற்றிய கோட்பாடுதான் பரிசுத்த வேதவாக்கியங்களின் மிகமுக்கியக் கருத்து. முதல் தம்பதியர் ஏதேனிலிருந்து விலகிய துயரமான நாள்முதல், அழிப்பவனின் வல்லமையைத் தகர்க்கவும், அவர்கள் இழந்த பரதீசுக்கு அவர்களை மீண்டும் கொண்டுவரவும், வாக்குப்பண்ணப்பட்டவரின் வருகைக்காக விசுவாசப்பிள்ளைகள் காத்திருக்கிறார்கள்'.

ஆரம்பக்கால அட்வென்டிஸ்ட் தலைவரான லூதர் வாரன், 'ஆயத்தமாகித் தயாராக இருப்பதுதான் கிறிஸ்துவின் வருகைக்காக ஆயத்தமாவதற்கான ஒரே வழி' என்று இளைஞர்களிடம் சொல்லுவார். கிறிஸ்துவின் சீக்கிர வருகைகுறித்த செய்தி நாம் நம் இருதயங்களை ஆராய்ந்துபார்க்கவும், நம் ஆவிக்குரிய வாழ்வை மதிப்பிடவும் வேண்டுகிற அவசர அழைப்பாக இருக்கிறது; அது பக்தியாக வாழ்வதற்கான அழைப்பாக இருக்கிறது. கிறிஸ்துவுடைய இரண்டாம் வருகையின் சுடரொளிப் பிரகாசத்திற்குமுன் நடுவிலை வகிக்க வாய்ப்பே இல்லை.

---

**கிறிஸ்துவுடைய வருகையின் தன்மைகுறித்து 1தெச 5:2-5; எபி 9:28 வசனங்கள் கொடுக்கிற ஊக்கம் என்ன?**

# வில்லியம் மில்லரும் வேதாகமமும்

கிறிஸ்துமேலுள்ள விசுவாசத்தால்மட்டுமே நீதிமான்களாக்கப்படுகிறோம் என்கிற சத்தியத்தை மீண்டும் கண்டுகொள்வதற்கு புரொட்டஸ்டஸ்ன்ட் சீர்திருத்த வாதிகளை தேவன் பயன்படுத்தியதுபோல, கிறிஸ்துவுடைய இரண்டாம் வருகையின் தன்மை குறித்த சத்தியத்தை மீண்டும் கண்டுகொள்ள வில்லியம் மில்லரைப் பயன்படுத்தினார். வேதவாக்கியங்களை ஆராய்ந்த மில்லர், தான் நினைப்பதைவிட தன்னை மிகவும் அதிகமாக நேசிக்கிற கிறிஸ்துவைக் கண்டுகொண்டார். வேதாகமத்தையும் ஒரு பேனாவையும் ஒரு நோட்டுப்புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு ஆதியாகமம்முதல் ஆராய ஆரம்பித்தார்; வாசிக்கிற வசனம் புரிகிற வரையிலும் அதைத் தாண்டிச் செல்லமாட்டார். வேத வசனங்களை வேத வசனங்களோடு ஒப்பிட்டு, வேதாகமமே தன்னை விளக்குவதற்கு அனுமதித்தார்.

**வேதாகமத்தை வியாக்கியானம் பண்ணுவதற்கான என்ன நியதிகளை ஏசாயா 28:9,10; நீதி 8:8,9; யோவான் 16:13; 2பேதுரு 1:19-21 இல் காணமுடிகிறது?**

---

வசனங்களை வசனங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்ததால், வேதாகமத்தின் மறைபொருட்கள் வெளிப்பட்டன. மறைவான பொக்கிஷத்தைத் தேடுவதுபோல, சத்தியத்தைத் தேடினார்; அதற்கேற்ற பலனைப் பெற்றார். ஆவியானவர் தேவவார்த்தையை அவருக்குப் புரியச்செய்தார். வேதாகமத்தின் மற்ற வசனங்களை கருத்தோடு ஆராய்ந்ததுபோலவே தீரக்கதரிசனங்களையும் ஆராய்ந்தார்.

**வேதாகமத்தின் தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்வதுபற்றி தானி 1:17; தானி 2:45; 1 பேதுரு 1:10, 11; வெளி 1:1-3 வசனங்கள் என்ன சொல்லுகின்றன?**

---

தீர்க்கதரிசனப் புத்தகங்களிலுள்ள அடையாளங்கள் மறைபொருட்களாக இல்லை. உலகத்தில் சீக்கிரம் நிகழப்போகிற காரியங்களுக்கு நம்மை ஆயத்தப்படுத்த அன்புள்ள ஒரு தேவன் தம் தீர்க்கதரிசன வார்த்தையைக் கொடுத்திருக்கிறார். தீர்க்கதரிசனத்தை தீர்க்கதரிசனம்தான் விளக்கமுடியும் என்பதை வில்லியம் மில்லர் தெளிவாகப் புரிந்திருந்தார். தீர்க்கதரிசன அடையாளங்களை வேதாகமமே தெளிவுபடுத்தியது. இராஜாக்கள் அல்லது இராஜ்யங்களை மிருகங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தானி 7:17,23. காற்று அழிவைக் குறிக்கிறது. எரே 49:36. தண்ணீர் ஜனங்கள் அல்லது தேசங்களைக் குறிக்கிறது. வெளி 17:15. ஸ்திரீ சபையைச் சுட்டிக்காட்டுகிறது. எரே 6:2; எபே 5:22-32. தானியேல்-வெளிப்படுத்தலின் தீர்க்கதரிசனக் காலங்கள் அடையாள மொழியில் சொல்லப்பட்டுள்ளன; ஒரு தீர்க்கதரிசன நாள் என்பது ஒரு வருடமாகும். எண் 14:34; எசே 4:6. இந்த வேதவியாக்கியான நியதிகளைப் பயன்படுத்தி வில்லியம் மில்லர் ஆராய்ந்தபோது, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எப்போது இருக்குமென ஒரு முடிவுக்கு வந்தார்; அது அவருக்கு திகைப்பாக இருந்தது.

---

**தீர்க்கதரிசன அடையாளங்கள் குறித்த சரியான புரிதல் ஏன் நம் விசுவாசத்திற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கிறது?**

# தானியேல் 8:14இன் 2300 நாட்கள்

ஆபிரகாமின் சந்ததியார் 400 வருடங்கள் அந்நியதேசத்தில் வாழ்தல், இஸ்ரவேலர் 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்துதிரிதல், இஸ்ரவேலர் 70 வருடங்கள் சிறையிருப்பில் கழித்ல், இஸ்ரவேலருக்கு 490 வருடங்கள் ஒதுக்கப்படுதல் என தீர்க்கதரிசிகள் முன்னுரைத்த நிகழ்வுகள் துல்லியமாக நிறைவேறியதை வில்லியம் மில்லர் கண்டுகொண்டார். ஆதி 15:13; எண் 14:34; எரே 25:11; தானி 9:24.

**முதலாம் வருகை தொடர்பாக, தேவன் குறித்த காலக்கட்டம்பற்றி மாற்கு 1:15; கலா 4:4; ரோமர் 5:6 என்ன சொல்கின்றன?**

---

வேதவசனங்களை வேதவசனங்களோடு ஒப்பிட்டு, தீர்க்கதரிசனங்களை ஆராய்ந்தபோது, வேதாகமம் முழுவதிலும் ஒரு தெய்வீக அட்டவணையை தேவன் வைத்திருந்ததை மில்லர் கண்டார்; எனவே, நம் கர்த்தருடைய இரண்டாம் வருகைகுறித்தும் ஒரு தெய்வீக அட்டவணையை அவர் வைத்திருக்க வேண்டுமென முடிவுக்கு வந்தார்.

**2300 நாட்களின் முடிவில் என்ன நிகழவிருந்தது? தானி 8:14.**

---

'பரிசுத்தஸ்தலம் சுத்திகரிக்கப்படுவது' என்பது பூமி அக்கினியால் சுத்திகரிக்கப்படுவது என்கிற பிரபலக்கருத்தை வில்லியம் மில்லர் ஏற்றுக்கொண்டார். அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுபற்றிப் புரிந்துகொள்ள கருத்தோடு வேதவாக்கியங்களை ஆராய்ந்தார். தானி 8; 9ஆம் அதிகாரங்களுக்கு தொடர்பிருப்பதைக் கண்டார். தானி 8இல், தூதனிடம், 'இவனுக்குத் தரிசனத்தை விளங்கப்பண்ணு' என்று சொல்லப்பட்டது. தானி 8:16. அந்த அதிகாரத்தின் முடிவில், அந்தத் தரிசனத்திலும் விளக்கப்படாத ஒரே பகுதி 2,300 நாட்கள்பற்றிய பகுதி என்பது புரிகிறது. பிறகு அத்தூதன் மீண்டும் தானியேலிடம் வந்து, 'உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்போது புறப்பட்டுவந்தேன்' என்று சொன்னான். தானி 9:22; மேலும் பார்க்க தானி 9:23,25-27. அதாவது, 2300 நாட்கள்பற்றி விளக்குவதற்காக வந்தான்.

'இப்போதும் சொல்லுகிற வார்த்தையை நீ கவனித்துக்கேட்டு, தரிசனத்தை அறிந்துகொள்' என்று சொல்லிவிட்டு, (தானி 9:23), தூதன் சொன்ன முதல் வார்த்தைகள் இதோ: 'உன் ஜனத்தின்மேலும் உன் பரிசுத்த நகரத்தின்மேலும் எழுபதுவாரங்கள் செல்லும்படி குறிக்கப்பட்டிருக்கிறது'. தானி 9:24. 'குறிக்கப்பட்டிருக்கிறது' என்பதற்கான எபிரெய வார்த்தைக்கு 'வெட்டப்பட்டிருக்கிறது' என்று அர்த்தம். எழுபது வாரங்களை, அதாவது 490 வருடங்களை வெட்ட வேண்டும். எதிலிருந்து? 2300 நாட்களிலிருந்து. அந்தப் பகுதியைமட்டுமே தானியேல் புரியாமல் இருந்தார்; அதுபற்றி விளக்கத்தான் தூதனும் வந்திருந்தார்.

அந்த 70 வாரக் காலக்கட்டம் 'எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல்' தொடங்குவதாகச் சொல்லப்பட்டது. தானி 9:25. எனவே அந்தக் கட்டளை வெளிப்பட்ட தேதியை அறிந்தால், 70 வாரங்கள், 2300 நாட்கள் ஆகியவற்றின் துவக்கத்தை அறிந்துகொள்ளலாமென மில்லர் புரிந்துகொண்டார்.

# நீளமான தீர்க்கதரிசன காலக்கோடு

**பெர்சியாவில் சிறைப்பட்டிருந்த இஸ்ரவேலர்களை விடுவித்து, தேவாலயத்தை மீண்டும் கட்டும்படி அனுப்பிவைத்த கட்டளை எப்போது பிறப்பிக்கப்பட்டது? எஸ்றா 7:7-13.**

---

கி.மு. 457இல், பெர்சியாவின் ராஜாவாகிய அர்தசஷ்டா அந்தக் கட்டளையைப் பிறப்பித்தார். யூதர்கள் திரும்பிச்சென்று எருசலேமை எடுத்துக் கட்டவும், ஆலய ஆராதனைகளை மீண்டும் நடத்தவும் அனுமதித்து இயற்றின மூன்று கட்டளைகளில் இது கடைசிக்கட்டளை. மூன்றாவது கட்டளைதான் அதிகாரமிக்கதாக இருந்தது; அதுதான் 2,300 நாள்/தீர்க்கதரிசனத்தின் ஆரம்பமாக இருந்தது.

**இந்தத் தீர்க்கதரிசனக் காலக்கட்டம் எப்போது துவங்கவிருந்தது? தானி 9:25,26. இந்த வசனங்கள் முன்னுரைக்கிற முக்கிய நிகழ்வுகள் என்ன?**

இந்தத்தீர்க்கதரிசனத்தில், 'எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக்கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவதுமுதல்' மேசியா வருமட்டும் 69 தீர்க்கதரிசன வாரங்கள் அல்லது 483 நாட்கள், அதாவது, உண்மையில் 483 வருடங்கள் செல்லும் என்று தானியேல் முன்னுரைத்தார். கி.மு. 457ம் ஆண்டின், இலையுதிர் காலத்தில் அந்தக் கட்டளை பிறந்ததால், அதிலிருந்து 483 வருடங்கள் கி.பி. 27இன் இலையுதிர் காலம் வரை வருகிறது. 'மேசியா' என்றால், 'அபிஷேகம்பண்ணப்பட்டவர்' என்று அர்த்தம். கி.பி. 27இன் இலையுதிர் காலத்தில் கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று, ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றார். அப் 10:38. இயேசு ஞானஸ்நானம் பெற்றபிறகு, கலிலேயாவுக்குச் சென்று 'தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து: காலம் நிறைவேறிற்று' என்றார்'. மாற்கு 1:14,15.

கி.பி. 31இன் வசந்தகாலத்தில், அதாவது தீர்க்கதரிசன வாரத்தின் நடுப்பகுதியில், இயேசு ஞானஸ்நானம் பெற்று, மூன்றரை வருடங்களுக்குப்பிறகு சிலுவையில் அறையப்பட்டார். தேவ ஆடுக்குட்டியைச் சுட்டிக்காட்டின பலிமுறை, கல்வாரியில் கிறிஸ்து பலியானதுடன் ஒழிந்துபோனது. நிழல் அப்போது நிஜம் ஆனது; அதனால் சடங்காச்சார முறையின் அனைத்துப் பலிகளும் காணிக்கைகளும் ஒழிந்தன.

**எழுபது வாரத் தீர்க்கதரிசனம் எவ்வாறு முடிவடையும்? தானி 9:27.**

யூதர்களுக்கு ஒதுக்கப்பட்ட எழுபது வாரங்கள் அல்லது 490 வருடங்கள், கி.பி 34இல் சுவிசேஷச் செய்தியை சனகெரீம் சங்கம் புறக்கணித்தபோது முடிவடைந்தது. அப் 6:8-7.

தீர்க்கதரிசனம் சொல்லுகிற 2300 வருடங்களிலிருந்து 490 வருடங்களைக் கழித்தால், 1810 வருடங்கள் உள்ளன. அது கி.பி. 1844இல் முடிவடைகிறது. வில்லியம் மில்லரும் ஆரம்பக்கால அட்வென்டிஸ்டுகளும் பூமிதான் தானி 8:14இல் வருகிற ஆசரிப்புக் கூடாரம் என்று நம்பினார்கள்; 1844இல், அக்கினியால் பூமியைச் சுத்திகரிக்க கிறிஸ்து வருவாரென நினைத்தார்கள். (வெள்ளிக்கிழமை பகுதியிலுள்ள அட்டவணையைப் பார்க்கவும்).

# மேலும் படிக்க:

70 வாரங்கள் மற்றும் 2300 நாட்கள் குறித்த பின்வரும் அட்டவணையைப் பாருங்கள். அத்தீர்க்கதரிசனம் கி.மு. 457இல் துவங்குகிறது; 70 வாரத் தீர்க்கதரிசனத்துக்கு அடிப்படையான 'பிரபுவாகிய மேசியா' சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை முன்னறிவிக்கிறது. 2300–நாள் தீர்க்கதரிசனமானது, 1844இல் முடிவடைகிறது.

**2300 நாட்கள் (2300 வருடங்கள்)**

| 70 வாரங்கள் (490 வருடங்கள்) | | 1810 வருடங்கள் |
|---|---|---|
| கி.மு. 457 | கி.பி. 34 | 1844 |

'முதல் சீடர்களைப் போலவே, வில்லியம் மில்லரும் அவருடன் இருந்தவர்களும் தாங்கள் அறிவித்த செய்தியின் கருத்தை முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை. நீண்டகாலமாக திருச்சபையிலிருந்த தவறான கருத்துகள்தான் இந்தத் தீர்க்கதரிசனத்தின் முக்கியக்கருத்தைப் புரிந்துகொள்ளத் தடையாக இருந்தன. தங்களிடம் தேவன் ஒப்படைத்த செய்தியை அவர்கள் சொன்னாலும், அதன் அர்த்தத்தை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டதால், ஏமாற்றத்தால் அவதிப்பட்டார்கள்'.

'நியாயத்தீர்ப்பின் எச்சரிக்கையை அந்தப் பிரகாரம் அறிவிக்க அனுமதித்ததிலும் தேவன் தமது நன்மையான நோக்கத்தை நிறைவேற்றினார். மகாநாள் சமீபித்திருந்தது. அவர்கள் மனதில் இருந்தவற்றை வெளிப்படுவதற்கு தேவ ஏற்பாடாக அது இருந்தது. அதன்படி அந்தக் குறிப்பிட்ட நேரம் அவர்களுக்குச் சோதனையாக வைக்கப்பட்டது. சபையைச் சோதிக்கவும், தூய்மைப்படுத்தவும் அந்தத் தூதை ஏற்படுத்தினார். அவர்களுடைய பற்று உலகத்தின்மேலா, கிறிஸ்துவின்மேலும்பரலோகத்தின் மேலுமா என்பதை அவர்களே கண்டுகொள்ளும்படி அவர்களை நடத்தினார். அவர்கள் தங்கள் இரட்சகரை நேசிப்பதாகக் கூறினார்கள்; இப்போது தங்கள் அன்பை நிரூபிக்க வேண்டியிருந்தது. அவர்கள் உலக நம்பிக்கைகளையும் இலட்சியங்களையும் விட்டுவிட்டு, தங்கள் ஆண்டவரின் வருகையை மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தயாராக இருந்தார்களா? தங்கள் உண்மையான ஆன்மிக நிலையை அறிந்துகொள்ள உதவும் வகையில் இந்தச் செய்தியை ஏற்படுத்தியிருந்தார்; மனந்திரும்புதலோடும் தாழ்மையோடும் கர்த்தரைத் தேடும்படி அவர்களைத் தூண்டுவதற்காக தேவ இரக்கத்தினால் அது அனுப்பப்பட்டது'.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *வில்லியம் மில்லரின் அனுபவத்திலிருந்து என்ன பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம்? சிலசமயம் நாம் தவறாகப் புரிந்துகொள்ளும்போது தேவன் பொறுத்துக் கொள்கிறாரா?*
2. *வேதாகமத்தின் மெய்த்தன்மையையும் கிறிஸ்துவின் தெய்வீக தன்மையையும் நிரூபிப்பதற்கு, தானி 9:24-27ஐப் புரிந்துகொள்வது ஏன் மிகவும் முக்கியமானது?*
3. *தீர்க்கதரிசனத்தைப் புரிந்துகொள்வது இரட்சிப்பின் திட்டத்தில் என்ன பங்காற்றுகிறது? தீர்க்கதரிசனம் ஏன் தேவதிட்டத்தில் முக்கிய இடம் வகிக்கிறது?*

# இருதயங்களைத் திறந்துவிடுதல்

**ஃபெட்கர் நன்ஸ்**

சமீபத்தில் ஓர் ஓய்வுநாளில், ஒன்டாரியோ எனும் கனடா மாகாணத்தில் உள்ள கிங்ஸ்டன் செவந்த்–டே அட்வென்டிஸ்ட் சபையில் இரண்டு சிரிய அகதிகள் ஆலய ஆராதனைகளில் கலந்துகொண்டார்கள். நான் ஒரு போதகர் என்பதால், சபைக்கு புதிதாக யாராவது வந்தால், மிகவும் மகிழ்ச்சியடைவேன்; ஆனால் வேறொரு மதத்தைச் சேர்ந்த ஒரு தாயையும் அவரது மகளையும் வரவேற்பது சிறப்பான சிலாக்கியமாக இருந்தது. 'அவர்கள் எவ்வாறு எங்களைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள்?' 'அவரகளை யார் ஆலய ஆராதனைக்கு அழைத்தார்?' என்று யோசித்தேன். அவர்கள் எங்கள் சபைக்கு வருவதற்கு முன்னரே, ஷெர்லி எனும் சபை அங்கத்தினர் சிரிய அகதிகளிடம் பழகியிருக்கிறார்.

ஷெர்லி முன்பின் தெரியாதவர்களை, குறிப்பாக அகதிகளை அதிகம் நேசிப்பவர்; அவரது அன்பான புன்னகையே இருதயங்களை உருக்கிவிடும். தன்னால் முடிந்த வழிகளிலெல்லாம் உதவிசெய்வார்; அவரது மனதுருக்கம் மக்களை உருகச் செய்துவிடும். விருந்துக்கோ கோடை சுற்றுலாவுக்கோ அவர் அழைக்கும்போது, அவர்கள் தட்டவே மாட்டார்கள். சிரியாவைச் சேர்ந்த அந்த தாயும் மகளும், ஓய்வுநாளில் ஆலயத்திற்கு வரும்படி ஷெர்லி கொடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டார்கள்.

ஆராதனை முடிந்த பிறகு, ஆலயத்திற்கு வெளியே அவர்களைச் சந்தித்தோம். ஏமான் மற்றும் ஹெபா ஆகிய அவர்கள் சந்தோஷமாகப் பேசினார்கள்; அவர்களுக்காக ஜெபிக்க நான் முன்வந்தபோது, சம்மதித்தார்கள். பிறகு யோவான் சுவிசேஷத்தின் அரபிக் மொழி பிரதிபற்றிச் சொன்னபோது ஆர்வமடைந்தார்கள்; அது கனடா வேதாகமச் சங்கத்தால் அச்சிடப்பட்ட பிரதி. "உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால் தாராளமாகச் சொல்லலாம்" என்றேன். அந்த அம்மா புத்தகத்தை வாங்கிக் கொண்டார். "இயேசுவை ஒரு தீர்க்கதரிசியென நம்புகிறோம். அதனால் இந்தப் புத்தகத்தை வாசிப்போம்" என்று சொன்னார்.

ஒரு சில நாட்கள் கழித்து ஷெர்லி என்னை அழைத்து, எனக்கு சூடான் பாஷை தெரியுமா என்று விசாரித்தார். "இங்கு ஆப்ரிக்காவைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் இருக்கிறார்கள்; அவர்களை நீங்கள் சந்திக்கவேண்டும்" என்று சொன்னார்.

ஷெர்லியின் உண்மையான அன்பும், முன்பின் தெரியாதவர்கள் மீதான அக்கறையும் தொடர்ந்து உள்ளங்களைத் திறந்து கொண்டிருக்கின்றன. கிறிஸ்துவின் பாணியை நாம் பின்பற்றவேண்டும் என்பதற்கு அவர் உதாரணமாக இருக்கிறார். 'மக்களை அணுகுவதில் கிறிஸ்துவின் பாணி மட்டுமே மெய்யான வெற்றி தரும். இரட்சகர் மக்களுடைய நலனை விரும்புவராக அவர்களுடன் கலந்தார். அவர்கள்மேல் பரிவு காட்டினார், அவர்களுடைய தேவைகளைச் சந்தித்தார், அவர்களது நம்பிக்கையைச் சம்பாதித்தார். பிறகு அவர்களிடம் "என்னைப் பின்பற்றி வாருங்கள்" என்று கட்டளையிட்டார்'. MH, p 143.

ஷெர்லி மக்களோடு கலக்கிறார்; அவர்கள் சொல்வதைக் கேட்கிறார்; சேவை செய்கிறார்; தன்னலமற்ற அன்பும் அக்கறையும் காட்டுகிறார்; அதன் மூலம் உடைக்கமுடியாத தடைகளை உடைக்கிறார். ஷெர்லியைப் போல நாமும் அனுதினம் மக்களை அணுகவேண்டும். 'நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்' என்று இயேசு சொன்னார்.